பணம் பெற்றுக்கொள்கிறார்கள். இம்மாதிரி ஆனரரி சர்ஜன்கள் செய்வதை அரசாங்கம் தடுத்து நிறுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதுகூட தனிக் கேள்விக்கு உரியதுதான். நான் விளக்கம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆஸ்பத்திரிகளில் சிறப்பு டாக்டர்கள்—ஆனரரி சர்ஜன்கள்—இருக்கிறார்கள். ஏதாவது ஒரு துறையில் சிறப்புத் தகுதி பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் சிறப்புத் தகுதி பெற்றவர்களை கௌரவ டாக்டர்களாக நியமிக்கிறோம். ஒரு வர் அறுவை சிகிச்சையிலே தகுதி பெற்றிருக்கலாம், ஒருவர் குழந்தை மருத்துவத்திலே தகுதி பெற்றிருக்கலாம், ஒருவர் தாய்-சேய் நல மருத்துவத்தில் சிறப்புத் தகுதி பெற்றிருக்கலாம். அப்படிப்பட்டவர்களாலே ஒருசில குறைகள் இருந்தாலும், அவர் களாலே பலருக்கு நன்மை கிடைக்கிறது. அவர்களுடைய போக்கு தானாக மாறிவிடும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அரசுப் பணிகளில் கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தை களுக்கு முதலிடம்

* 20 **வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் குழந்தை களுக்கு அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகத் துறையில் முதலிடம் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளின் குழந்தைகளுக்கு அரசாங்க உத்தியோகத்தில் முதலிடம் தரப்படுமா? அப்படி முதலிடம் தருவதன் மூலம் நாட்டிலே கலப்புத் திருமணம் செய்துகொண்ட வர்களின் எண்ணிக்கை அதிகமாகி, சாதி சமயங்கள் எல்லாம் குறையும். ஆகவே, கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தை களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் முதலிடம் தரப்படும் என்பதைச் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்பவர்கள்கூட கலப்புத்திருமணம் செய்துகொள்ள முன்வரு வதில்லை. அவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டதற்குப் பின்னர்தான் அவர்களுடைய குழந்தைகளுக்கு உத்தியோகம் அளிப்பது பற்றி கவனிக்கவேண்டும். இப்போது கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கம் கொடுக் கிறோம். 'நாங்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டோம்'

1971 அக்டோபர் 22]

என்று வெளியிலே சொல்வதற்குங் கூட பலர் அஞ்சுகிறார்கள். தங்களுடைய விருப்பத்திற்காக கலப்புத் திருமணம் செய்து கொள்கிறார்களே அன்றி, யாரும் கொள்கைக்காக செய்துகொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டால், அவருக்குத் தங்கப் பதக்கமும், அவருடைய குழந்தைகளுக்கு அரசாங்க உத்தியோகமும் கொடுக்கலாம்.

திரு. எம். முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்தவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகைகள் இல்லையென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் குழந்தைகள்—கல்வி, உத்தியோகம் இப்படிப்பட்டவற்றில் சலுகைகள் அளிப்பதற்காக மார்க்கெட்டிலே உள்ள சாமான்கள் தரம் பிரித்து வைக்கப்படுவதைப்போல்—கல்வி, உத்தியோகம் போன்றவற்றில் பேக்வர்ட், பார்வர்ட், ஷெட்யூல்ட் கேஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப் என்று பிரித்து வைக்கப்படுகிறார்கள் எனவே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுடைய குழந்தைகளுக்கு இதிலே எந்தத் தரத்தில் சலுகைகள் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். கலப்புத் திருமணம் செய்து கொள்வதற்கு இன்னும் ஆர்வம் பிறக்கவில்லை. ஜாதியை ஒழிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வேண்டுமானால் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு அவற்றில் சலுகைகள் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் உத்தேசிக்கலாம். கலப்புத் திருமணம் அதிகப்படியாகச் செய்துகொள்ளப்படவில்லை. அதனால் ஜாதிகள் இன்னும் இந்த நாட்டில் இருக்கின்ற நிலைமைதான் இருக்கிறது. கலப்புத் திருமணங்கள் அதிகப்படியாகச் செய்துகொள்ளக் கூடிய நிலைமை உருவானதற்குப் பிறகு வேண்டுமானால் அவர்களுடைய குழந்தைகளுக்கு எப்படிச் சலுகைகள் தரலாம் என்பதை அரசாங்கம் கவனிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கலப்புத் திருமணம் செய்து கொள்ளக் கூடிய தம்பதிகள் குறிப்பிட்ட ஒரு ஜாதியினால் தள்ளி வைக்கப்படுகிறார்களே, அதுமாதிரிச் சம்பவங்கள் ஏற்பட்டபொழுது அந்த சமூகத் தலைவர்களின் பேரிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இனியாவது எடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இவைகள் எல்லாம் சீர்திருத்த முறைகள் ஆகும். எனவே கட்டாயமாக தண்டனை கொடுக்கவேண்டும் என்பது அல்ல. கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற முறையிலே, பாராட்டுகின்ற முறையிலேதான் அரசாங்கம் தங்கப் பதக்கங்களைப் பரிசாகத் தருகிறது. கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களிலே அந்த இருவரிலே ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்கவேண்டும் அப்படி இருந்தால் அந்த

[1971 அக்டோபர் 22

ஒருவருக்கு மட்டுமல்ல, கலப்புத் திருமணம் செய்துகொண்ட இருவருக்குமே பொருளாதாரச் சலுகைகள் மற்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன என்ன கிடைக்கின்றதோ அவையெல்லாம் இருவரில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருப்பதன் காரணமாக இருவருக்குமே கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நல்ல கொள்கைகளை கட்டாயமாகத் திணிப்பதற்கு இல்லை.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுடைய குழந்தைகளுக்கு எந்தச் சலுகையும் இப்பொழுது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு எந்த எந்த முறைகளிலே உத்தியோகச் சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களில் ஒருவர் கட்டாயமாகத் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். மற்றொருவர் முற்போக்கோ, பின்தங்கிய வகுப்போ, மிகவும் பின்தங்கிய வகுப்போ இருக்கலாம். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் தம்பதிகளில் ஒருவராக இருப்பாரானால் அவர்களுக்கு நிலம் இல்லாதவர்களுக்கு நிலம், வீட்டு மனை வழங்குவது, வட்டியில்லாத கடன்கள் வழங்குவது இப்படிப்பட்ட எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்படுகிறது அரசாங்கத்தால். அவர்களுக்கு என்று தனியாக அரசாங்கப் பணிமனைகளில் அமர்த்துவதற்கு எந்தவிதமான ஆலோசனையோ திட்டமோ இப்பொழுது இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது தங்கப் பதக்கம் கொடுத்தாலும் கலப்புத் திருமணம் செய்துகொள்வதற்கு அதிகமாக முன்வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே இருக்கிற நேரத்திலே, நிச்சயமாக வேலைகிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தால் அதிகமாக கலப்புத் திருமணம் செய்துகொள்ள முன்வருவார்கள் என்பதால் அவர்களுக்கு என்று இத்தனை சதவீதம் என்று ரிசர்வேஷன் செய்துவிட அரசாங்கம் இனியாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நாம் பார்த்து இருக்கிறவரையில் கொள்கைக்காக யாரும் செய்துகொள்வதில்லை. அவரவர்கள் விருப்பத்தின் காரணமாகத்தான் செய்துகொள்கிறார்கள். கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களில் பலபேர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டோம் என்று வெளியிலே சொல்வதற்குக் கூட வெட்கப்படுகிறார்கள். காரணம் அவர்கள் ஏதாவது ஒரு உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிகொண்டே சமுதாயத்திலே வாழவேண்டுமென்று நினைக்கிறார்கள். அப்படி அவர்களுக்கு வேலைவாய்ப்பில் ரிசர்வேஷன் என்று வைத்தாலும்கூட அவர்களுக்கு வேலை கிடைத்த பிறகு மணம்செய்துகொண்ட ஒரு துணைவரை விட்டுவிட்டுக் கூட போய்விடலாம். எனவே அப்படியெல்லாம் அரசாங்கம் உத்திரவாதம் கொடுக்க

1971 அக்டோபர் 22]

முடியாது. வாய்ப்புகள், சலுகைகள் கிடைக்கும் என்பதற்காக கொள்கைக்கு வருகிறவர்களைவிட கொள்கையிலே நம்பிக்கைக் கொண்டு கொள்கைக்காக வருகிறவர்களைத்தான் அரசாங்கம் பாராட்டுகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களிலே ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவராக இருந்தால்தான் கலப்பு திருமணம் என்று அரசு ஏற்றுக்கொள்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருவர் உயர்ந்த ஜாதி மற்றொருவர் பிற்பட்ட வகுப்பினராக இருந்தால் அதை அரசாங்கம் கலப்பு மணம் என்று ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தாழ்த்தப்பட்ட மக்கள்தான் சமுதாயத்திலே ஒதுக்கிவைக்கப்பட்டார்கள், அவர்களை தொடக் கூடக் கூடாது என்ற நிலைமையிலே கிராமங்களிலேகூட அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்குத்தான் அரசாங்கம் உதவிசெய்கிறது. முற்போக்கு அல்லது பின்தங்கியவர்கள் கலப்பு மணம் செய்துகொண்டால் அது ஒரு புரட்சிகரமான மாறுதல் என்று சொல்லிவிடமுடியாது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் ஒருவராக இருந்து அந்தத் திருமணம் நடந்திருந்தால் அதை அரசாங்கம் கலப்புத் திருமணம் என்று ஏற்றுக்கொள்கிறது. அவர்களுடைய குழந்தைகளுக்குத் தனியாக எந்தவிதமான சலுகையும் காட்ட அரசாங்கம் இப்பொழுது கருதவில்லை. கலப்புத் திருமணம் அதிகமாகச் செய்து கொள்ளக்கூடிய நிலைமை வரும்பொழுது ஜாதிகள் ஒழிக்கப் பட்டுவிடும். இப்பொழுது அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளையும் ஒரு தனி ஜாதியாக ஆக்க நல்லெண்ணம் கொண்ட எந்த அரசாங்கமும் முன்வராது.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் கொள்கை என்பது இல்லாமல் தங்கப் பதக்கம் கொடுப்பதனாலேயே இதை ஊக்கப்படுத்திவிடலாம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் சமுதாயத்திலே மறுமலர்ச்சி ஏற்படுத்திவிடமுடியாது. வறுமையை ஒழிப்பதற்கு வழிசெய்தால்தான் அந்தச் சமுதாயத்திலே மறுமலர்ச்சி ஏற்படும் என்று யாரும் எந்தப் பெரியவரும் கண்டுபிடிக்கவில்லை. எனவே வறுமையை ஒழிக்கக்கூடிய முறையிலே அவர்களுக்கு உபகாரம் செய்வதற்கான நிலைமையை அரசாங்கம் முக்கியமாக தனது கொள்கையாக வைத்துக்கொள்ளவேண்டும். அப்படியிருந்தால் தான் மறுமலர்ச்சி ஏற்படும். இதே பதிலைச் சொல்லிக்கொண்டிருக்காமல் அப்படி ஒரு கொள்கையைக் கடைபிடிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: உறுப்பினர் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். கட்டாயமாக—கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களில்—ஒருவர் தாழ்த்தப்பட்ட

சமூகத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் அவர்களுக்கு பொருளாதாரச் சலுகைகள், இன்னும் வீட்டு மனைகள் கொடுப்பது, சாகுபடிக்கு நிலங்கள் கொடுப்பது, வேலை வாய்ப்புக்களில் சலுகைகள்கொடுப்பது இவை போன்ற எல்லாவித மான ஏற்றங்களையும் பெறுவதற்கு அந்த இருவரில் ஒருவருக்கு அந்தஸ்து இருக்கின்ற காரணத்தினாலே அதன்மூலம் மற்றவரும் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அப்படிப் பிணைக்கப்பட்டால் தான் அந்தப் பிணைப்பு இறுதிவரை இருக்கும். சமுதாயத்திலே ஏற்றத்தாழ்வுகள் குறையும். அதற்காகத் தனிச் சலுகைகள் என்று வைத்தால் சலுகைகளுக்காக என்றுதான் வருவார்கள், கொள் கைக்காக வரமாட்டார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு மணங்கள் சுவர்க்கத்திலே நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல் வார்கள், ஆனால் உண்மையிலேயே சுவர்க்கத்திலே நடைபெற வில்லை. பூமியிலேதான் நடைபெறுகின்றன. எனவே நடைமுறை யிலே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குச் சலுகை கள் காட்டவேண்டும். இல்லாவிட்டால் சட்டத்தின் மூலமாகச் செய்யவேண்டும். இந்த இரண்டு வழிகளினால்தான் ஜாதிகளை ஒழிக்கமுடியும். எனவே அரசாங்கம் இரண்டில் ஒன்றைப் பின் பற்றுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களின் திருமணங்கள்தான் சுவர்க்கத்திலே நிச்சயிக்கப்படுகின்றன. கலப்புத் திருமணங்கள் நரகத்திலே நிச்சயிக்கப்படுகின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாவித மான சலுகைகளும் தரவேண்டுமென்பதுதான் அரசாங்கம் விரும்பு கிறது.

திருமதி . த. ந. அனந்தநாயகி : கலப்புத் திருமணங்கள் நரகத் திலே நடக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் கலப்புத் திருமணம் செய்துகொள்வதற்கே இனி மேல் பயப்படுவார்கள். எனவே அவர்கள் பூமியிலே நடக்கின்றன என்று சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

MR. SPEAKER : The Hon. Minister may correct the answer.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கனம் உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி அப்படியிருந்தது. திருமணங் கள் சுவர்க்கத்திலே நிச்சயிக்கப்படுகின்றன என்று அவர்கள் சொன்ன கருத்திலே எனக்கு நம்பிக்கை இல்லை. சுவர்க்கத்திலே கிடையாது. திருமணங்கள் சுவர்க்கத்திலே நிர்ணயிக்கப்படு கின்றன என்று சொன்னார்கள். அப்படியில்லை, கலப்புத் திருமணங் கள் வேண்டுமானால் நரகத்திலே நடக்கலாம என்று வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன்

1971 அக்டோபர் 22]

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்தக் கலப்புத் திருமணம் என்பதை, ஹரிஜன் ஒருவரை மணந்துகொண்டால்தான் அதைக் கலப்புத் திருமணம் என்று ஏற்றுக்கொள்கிறார்கள். அப்படியில்லாமல் இரண்டு வேறுவேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டாலும் அதையும் கலப்புத் திருமணம் என்று ஏற்றுக்கொண்டு அரசாங்கம் சலுகை அளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, வேறு இரண்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இணைவதில் பெருமையில்லை. இன்றைக்கு அவர்கள் ஒருவருக்கொருவர் சேர்ந்து வாழும் சமுதாயச் சூழ்நிலையைப் பார்க்கிறோம். எனவே அவர்களுடைய வாழ்க்கையெல்லாம் புரட்சிகரமான முன்னேற்றமாகாது. முற்றிலும் மாறுபட்ட எண்ணத்திலே, ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சமுதாயத்திற்குச் சொந்தக்காரர்களை வாழ்க்கைத் துணையாக ஏற்பதைத்தான் சமுதாயத்தில் சிறந்த புரட்சியாக அரசு கருதுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணும், ஹரிஜன வகுப்பு அல்லாத ஒரு ஆணும் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் இன்றைக்கு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை எந்தச் சமூகத்தைச் சேர்ந்ததாக அங்கீகரிக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, அவர்கள் உயர்ந்த மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். சட்டப்படி பார்த்தால் தந்தையின் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஏற்கனவே திருமணம் ஆன ஒருவர் கலப்புத் திருமணம் செய்துகொள்ள முன்வந்தால் தண்டனையிலிருந்து விடுபெற விதிவிலக்கு அரசு அளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, சமுதாயமோ அரசோ ஏற்றுக்கொண்டால்கூட ஏற்கனவே மணம் செய்துகொள்ளப்பட்ட மனைவி ஏற்றுக்கொள்ள மாட்டாள். அவளுக்கென்று தனி உரிமை இருக்கிறது.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, திருமணத்தில் ஒருவர் மனம்மாறி தாழ்த்தப்பட்ட ஒருவரை மணந்துகொண்டால் அந்தச் சலுகை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, கலப்புத் திருமணம் என்றாலே மனம் மாறித்தான் (குறுக்கீடு) மதம் மாறுதலுக்கு எந்தவிதச் சலுகையும் இருக்கவில்லை.